புதிய அவையம்
(Peer -Reviewed Journal)
ISSN: 2456-821X
Vol. 08, Issue 01 - June 2024

# தமிழ்க் கதைப்பாடல்கள் வழிப் புலனாகும் நிரை கவர்தலும் மீட்டலும்

**முனைவர் ந.சோழன்**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)
திருப்பத்தூர் - 635 601.

தொல்நிலைச் சமுதாயத்திலிருந்து தற்போதுவரை பசுக்கள் மனிதனின் வாழ்வில் முக்கிய இடத்தினைப் பெறுகின்றன. அத்தகைய பசுக்களைக் காப்பதென்பது முக்கியக் கடமையாகச் சுட்டப்படுகின்றது. ஏனெனில் பசுக்கள் உழவு, உணவு ஆகியவற்றில் முக்கிய இடம் பெறுகின்றமையும் நோக்கத்தக்கது. இவை மனிதனின் செல்வச் செழிப்பினையும் காட்டி நிற்கின்றன. ஆகையால் இத்தகைய பசுக்களைக் காக்க வேண்டியிருக்கின்றது. இவற்றை எதிரிகளிடமிருந்து காப்பவன் வீரனாக மதிக்கப்படுகின்றான். கிரேக்கக் காவியங்களான இலியட், ஒடிசி ஆகியவற்றிலும் நிரைகளைக் காக்க வேண்டி ஏற்பட்ட சண்டைகளைக் காணமுடிகின்றது. இலியட் காவியத்தின் மூத்த போர் வீரர்களுள் ஒருவனான நெஸ்டார் (Nestor) என்பவன், ‘நிரைகளைக் காப்பதன் பொருட்டு எங்களுக்கும் எலியன்களுக்கும் இடையே கடுஞ்சண்டை நடந்தது. அப்போரில் நான் எதிரிகள் பலரைக் கொன்று பாழ்ப்படுத்தினேன்’ (N.K.Sidhanta, 1929:137.) எனத் தன் இளமைக்கால வீரச்செயல்களை நினைவுகூர்கின்றமை நோக்கத்தக்கது. தமிழரின் தொன்மையான போர் மரபில் நிரைகள் முக்கியப் பங்காற்றுகின்றன. பழந்தமிழரின் போர் நெறிமுறையினை விளங்கிக் கொள்ள தொல்காப்பியம் உற்ற துணையாக அமைகின்றது. தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் புறத்திணை என்ற இயலுள்ளது. அவ்வியலுள் போர்களை வெட்சி உள்ளிட்ட ஏழாகப் பாகுபடுத்தியுள்ளார். வெட்சித் திணையானது வேற்றுநாட்டு நிரைகளை வீரர்கள் கவர்வதும், கவர்ந்து சென்ற நிரைகளை வீரர்கள் மீட்பதனைப் பற்றியும் பேசுகின்றது. வெட்சித் திணையினைக் குறித்து,

‘வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவி
னாதந் தோம்பன் மேவற் றாகும்’ (தொல்.பொருள்.57)

*எனத் தொல்காப்பியம் கூறுகின்றது. தொல்காப்பியத்திற்குப் பன்னெடுங்காலம் பிந்தைய புறப்பொருள் வெண்பாமாலையில் நிரை கவர்தல் வெட்சியாகவும், நிரை மீட்டல் கரந்தையாகவும் பிரித்துப் பேசப்பட்டுள்ளது. இது கால வளர்ச்சியினால் ஏற்பட்ட நுண்பாகுபாட்டினை விளக்கி நிற்கின்றது. தமிழ்ச் சமூக மரபில் நிரை கவர்தலும் நிரை மீட்டலும் முக்கியப் பங்கு வகிப்பதனை இதன்வழி அறிய முடிகின்றது.*

*மக்களிடையே கதை, பாடல், விடுகதை, பழமொழி, கதைப்பாடல் போன்ற பல்வேறு வாய்மொழி இலக்கிய வகைகள் வழங்கி வருகின்றன. அவற்றுள் வாய்மொழி வழியாகக் கையளிக்கப்பட்டு வருகின்ற கதைப்பாடல் மிக முக்கியமானதாகும். ஏனெனில் கதைப்பாடல்கள் நெடுங்கதையாகவும் மக்களின் முன் எடுத்துரைக்கப்படுவதாகவும் பெரும்பாலானவை வீரத்தை மையமிட்டதாகவும் அமைகின்றன. கதைப்பாடல் குறித்த எளிமையான அதே நேரத்தில் சிறப்பானதொரு விளக்கமாக, குறிப்பிட்டதொரு பண்பாட்டில் குறிப்பிட்டதொரு சூழலில் வாய்மொழியாக ஒரு பாடகனோ அல்லது ஒரு குழுவினரோ சேர்ந்து நாட்டார் முன் எடுத்துரைத்து இசையுடன் நிகழ்த்தும் அல்லது நிகழ்த்திய ஒரு கதை தழுவிய பாடலே கதைப்பாடல் (நா.இராமச்சந்திரன், 2002: 55) என்ற விளக்கம் அமைகின்றது. கதைப்பாடலானது பல்வேறு பொருண்மைகளைத் தன்னுள்ளே கொண்டிருக்கின்றது. அப்பொருண்மைகள், புராண இதிகாசங்களின் சிறு கூறுகள், ஊர்த் தெய்வங்களின் வரலாறு, சமுதாயத்தில் வீரதீரச் செயல்கள் புரிந்து உயிர் நீத்தவர்களின் வரலாறு, தம் அறிவுக்கு எட்டிய வரலாற்றுச் சிறப்புகள் ஆகியவற்றைப் புலமை வாய்ந்த ஒருவர் கற்பனை கலந்து இசையுடன் கூடிய பாடலாகப் புனைவதே கதைப்பாடல் (இரா.காசிராசன், 1980: 28) எனப் பரந்து விரிந்த தளத்தில் கதைப்பாடல் அமைகின்றமை நோக்கத்தக்கது.*

*பண்டைய தமிழர்களின் தொன்மையான வீரநிலைக் கூறான நிரை கவர்தலும் மீட்டலும் ஆகிய போர்நிலைக் கூறுகள் வீரத்தை மையமிட்ட தமிழ்க் கதைப்பாடல்களுள் சமூகக் கதைப்பாடல்களான அண்ணன்மார் சுவாமி கதை, மதுரைவீரன் கதை, முத்துப்பட்டன் கதை , ஆந்திரமுடையார் கதைப்பாடல், ஈனமுத்துப் பாண்டியன் கதை, மெச்சும் பெருமாள் பாண்டியன் கதை, சேர்வைக்காரன் கதை ஆகியவற்றிலும் வரலாற்றுக் கதைப்பாடல்களான ஐவர் ராசாக்கள் கதை, அழகன் பெருமாள் கதை, உலகுடைய பெருமாள் கதை, இராமப்பய்யன் அம்மானை, தேசிங்குராசன் கதை, கான்சாகிபு சண்டை, பூலித்தேவன் ஒயில் கும்மி, தம்பிமார் கதை, வீரபாண்டிய கட்டபொம்மு கதைப்பாடல், சிவகங்கை சரித்திரக் கும்மி ஆகியவற்றிலும் எவ்விதம் புனையப்பட்டுள்ளன என்பதை ஆராயும் விதத்தில் இக்கட்டுரை அமைகின்றது.*

***சமூகக் கதைப்பாடல்களில் நிரை காத்தலும் மீட்டலும்***

*நாம் ஆய்விற்கு எடுத்துக் கொண்ட சமூகக் கதை பாடல்களுள் அண்ணன்மார்சுவாமி கதை, முத்துப்பட்டன் கதை, ஆந்திரமுடையார் கதைப்பாடல் ஆகியவற்றில் நிரை காத்தல் என்ற வீரநிலைக் கூறு இடம் பெற்றுள்ளது. அவை குறித்து இனிக் காண்போம்.*

***அண்ணன்மார்சுவாமி கதையில்*** *கதைத் தலைவர்களான பொன்னர், சங்கரின் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் எதிரிகள் வந்து கொள்ளையிட்டுப் பொன், பொருள் மற்றும் நிரைகளைக் கொண்டு செல்கின்றனர். இதனையறியும் பொன்னரும் சங்கரும் கடுங்கோபம் கொண்டு எதிரிகளை அழிக்கச் செல்கின்றனர். எதிரிகள் இருக்குமிடம் சென்று அவர்கள் கொள்ளையடித்த ஆடு, மாடு உள்ளிட்ட பொருட்களை மீட்டு வருகின்றனர். எதிரிகள் நிரைகளைக் கொள்ளையிட்டதனை,*

*'கோவில் கிராமமெல்லாம் வேட்டுவர் கொள்ளையிட்டு வாராரே*
*ஆடுகொள்ளை மாடுகொள்ளை அனைவருக்கும் உள்ளகொள்ளை'   (3133-3134)*

*என்ற அடிகள் உணர்த்தி நிற்கின்றன. இதன்வழி அண்ணன்மார் தாங்கள் சார்ந்த கூட்டத்திற்குச் சிறந்த காவல் வீரர்களாக விளங்கியுள்ளமையினை உணரமுடிகின்றது. மேலைநாட்டு வீரநிலை இலக்கியங்களை ஆய்விற்கு உட்படுத்திய பௌராவும் 'தன்னுடைய மக்களுக்காகப் போராடுபவன் வீரனாக மதிக்கப்படுவான்' (C.M.Bowra, 1952: 112.) எனக் கூறுகின்றமை மேற்கண்டதனோடு ஒப்புநோக்கத்தக்கது.*

***முத்துப்பட்டன் கதையின்*** *தலைவனான முத்துப்பட்டனுக்குச் சொந்தமான மாடுகளைக் கள்வர்கள் கவர்ந்து செல்கின்றனர். இதனைக் கேட்ட மாத்திரத்திலேயே பட்டன் ஓடோடிச் சென்று கள்வர்களை இடையிலேயே மறித்துப் போரிட்டுத் தனது மாட்டை மீட்கின்றான். முத்துப்பட்டன் கள்வர்களிடமிருந்து மாட்டை மீட்டதனை,*

*'திரையோடே மாட்டைத் தளுக்குதிட்டையில் சேர்த்துமே முத்துப்பட்டன்*
*சிங்கம்போல் வந்து வன்னியர் கூட்டத்தில் திக்கென போர் புரிந்தான்' (364-65)*

*என்ற அடிகள் உணர்த்தி நிற்கின்றன. முத்துப்பட்டன் வீரனாக மதிக்கப்படுவதற்கு இந்நிரைகாத்தல் போரே அடிப்படையாக அமைகின்றமை உய்த்துணரத்தக்கது.*

***ஆந்திரமுடையார் கதைப்பாடலின்*** *தலைவனான ஆந்திரமுடையான் தன்னூரில் வந்து கொள்ளையர்கள் கொள்ளையிட்டு ஆடு, மாடுகளைக் கொண்டு சென்றதனைக் கேள்விப்படுகின்றான். உடனடியாக அவர்களைத் துரத்திச் சென்று போரிட்டு நிரைகளை மீட்டும் வருகின்றான். இதனை,*

*'அப்படி கள்ளர்கள் மாடு கொண்டுபோக*
*கண்ணிலே கண்டு ஆந்திரமுடையார்*
*விண்ணொளிபோலே எதிர்சென்று மறைந்தார்*

*வடதிசையில் வந்த நிரைதன்னை மறித்து’* *(666-69)*

*என்ற அடிகள் உணர்த்தி நிற்கின்றன. இங்கும் வீரனென்பவன் நிரைகளைக் காப்பவன் எனப் பேசப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது. இதுவரை நாம் கண்ட தமிழ்ச் சமூகக் கதைப்பாடல்களில் இடம்பெறுகின்ற நிரை காத்தல் என்ற கூறில் நிரையைக் கவர்வதற்கான வெட்சியும், நிரையை மீட்பதற்கான கரந்தையும் இணைத்தே பேசப்பட்டுள்ளமையினை உணரமுடிகின்றது. பழந்தமிழர் போர் மரபில் நிரை கவர்தல் மற்றும் நிரை மீட்டல் ஆகிய செயல்களில் ஈடுபடுகின்ற இருதிறத்தாரின் அருஞ்செயல்களும் புகழப்பட்டு வீரர்களாகப் போற்றப்படுகின்றனர். ஆனால் தமிழ்ச் சமூகக் கதைப்பாடல்களில் நிரை கவர்தலில் ஈடுபடுகின்றவர்கள் கள்வர்களாக இகழப்பட்டு, நிரை மீட்டலில் ஈடுபடுகின்றவர்களே வீரர்களாகப் புகழப்படுகின்றமை நோக்கத்தக்கது. இதற்குக் காரணம் சமூக மாற்றமே. போரை மையமாகக் கொண்ட பழங்காலச் சமூக அமைப்பே நிரை கவர்தலில் ஈடுபடுவோரையும் வீரர்களாகப் போற்றியமைக்கான அடிப்படைக் காரணமாக அமைகின்றமை உய்த்துணரக் கூடியதாகும். இந்தியாவின் இருபெருங் காவியங்களான இராமாயணம், மகாபாரதத்தை வீரநிலைக் கோட்பாட்டு அடிப்படையில் ஆய்விற்கு உட்படுத்திய என்.கே. சித்தாந்தா, ‘ஹோமரின் காவியங்களான இலியட்டும் ஒடிசியும் இந்தியக் காவியக் கதைகளோடு நிரைகளை முக்கியச் சொத்தாகக் கருதுதல் என்ற பண்பில் ஒத்துச் செல்கின்றன’ (N.K.Sidhanta, 1929: 137.) எனக் கூறியுள்ளமையும் நிரைகளைக் காக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தி நிற்கின்றது.*

***வரலாற்றுக் கதைப்பாடல்களில் நிரை காத்தலும் மீட்டலும்***

*நாம் ஆய்விற்கு எடுத்துக் கொண்ட வரலாற்றுக் கதைப்பாடல்களுள் பூலித்தேவன் ஒயில் கும்மியில் மட்டும் நிரைகாத்தல் என்ற வீரநிலைக் கூறு இடம் பெற்றுள்ளது. அது குறித்துக் காண்போம்.*

***பூலித்தேவன் ஒயில் கும்மியில்*** *நெற்கட்டான் செவ்வலைத் தலைமை இடமாகக் கொண்டு ஆண்டு வருகின்றான் பூலித்தேவன். தன் காவல் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் எதிரியான வரகுணன் வந்து நிரைகளைக் களவாடியதைக் கேட்டுக் கடுங்கோபம் அடைகின்றான். நிரை களவினால் பூலித்தேவன் கடுங்கோபம் அடைந்ததனை,*

*‘வள்ளக் குளத்திலே பண்ணைப் - பசுமேய*
*வந்து திரட்டினான் வரகுணனும்*

........................................................

*பூலி இருக்கிற இடமென்று – அறியாமல்*
*புல்வாய் வந்ததென்ன சவுணையும்’* *(433-436)*

என்ற அடிகள் விளக்கி நிற்கின்றன. பிறகு வரகுணன் களவாடிச் சென்ற நிரைகளைச் சண்டையிட்டு மீட்டு வருகின்றான் பூலித்தேவன். 'யாகுத் கவிதையில் இடம்பெறுகின்ற காப்பிய வீரர்களைக் குறித்து ஆராய்ந்த டிரெபலெவ், வீரனின் முக்கியப் பணிகளுள் ஒன்றாக எதிரிகளிடமிருந்து நிரைகளைக் காத்தல் என்ற பண்பினைக் குறிப்பிட்டுள்ளமையும் நிரைகாவலின் முக்கியத்துவத்தினை உணர்த்தி நிற்கின்றது'. *(Vadim V. Trepavlov, 1995: 43.)*

இங்குப் பூலித்தேவன் ஒயில் கும்மியைத் தவிர பிற தமிழ் வரலாற்றுக் கதைப்பாடல்களில் நிரைகளைக் காத்தல் என்ற வீரநிலைக் கூறு இடம்பெறவில்லை. இதற்குக் காரணம் இவை வரலாற்று நிகழ்வுகளை ஒட்டிச் செல்வதால் வீரர்களின் வரலாற்றில் இடம் பெறாத இக்கூறினைத் தவிர்த்திருக்க வாய்ப்பிருப்பதனை உய்த்துணர முடிகின்றது. முன்னரே குறிப்பிட்டதைப் போல இங்கும் தமிழ் இலக்கண மரபிற்கு மாறாக நிரை கவர்வோர் கள்வராகவும் நிரை மீட்போரே வீரராகவும் கருதப்படுகின்றமை நோக்கத்தக்கது.

சமூக மக்களின் நிரைகளைக் காப்பவன் வீரன் என்ற கருத்துநிலை முன்வைக்கப்படுவதால் சமூகக் கதைப்பாடல்களில் பிற வகைமையிலான கதைப்பாடல்களைவிட அதிக அளவில் நிரைகளைக் காத்தல் என்ற கூறு முன்னிறுத்தப்பட்டுள்ளது என்பதனை உய்த்துணர முடிகின்றது. வரலாற்றுக் கதைப்பாடல்களில் வீரர்களின் வரலாற்றுத் தன்மையினைக் கருதியும் போருக்கான காரணங்களாக வரிவசூல், மேலாதிக்கம் போன்றவை அமைவதாலும் இக்கூறு கவனப்படுத்தப்படவில்லை என்பதனை உணரமுடிகின்றது. தொல்தமிழ் இலக்கண மரபின்படி நிரை கவர்வோரும் மீட்போரும் வீரர்களாகவே மதிக்கப்படுவர். ஆனால் தமிழ்க் கதைப்பாடல்களில் நிரை மீட்போர் மட்டுமே வீரராகவும் நிரை கவர்வோர் கள்வர்களாகவும் படைக்கப்பட்டுள்ளனர். இதற்குக் காரணம் சமூக மாற்றமே ஆகும்.

துணை நூல்கள்


1. இராமச்சந்திரன். நா. 2002, துடியான சாமிகள்- வில்லுப்பாட்டும் சமூகச் சிக்கல்களும், சென்னை, மக்கள் வெளியீடு.
2. காசிராசன், இரா. 1980. உலகக் காப்பியங்கள், சென்னை.
3. தாமரைப்பாண்டியன், சு., 2014,கதைப்பாடல் சுவடித் திரட்டும் பதிப்பும்(பகுதி1,II,III),சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
4. தொல்காப்பியம், 2007, பொருளதிகாரம் (பேராசிரியர் உரை: முன் ஐந்தியல்கள்), சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
5. ஜெயக்குமார், கோ(தொ.ஆ,). 2009. நா.வானமாமலையின் கதைப்பாடல் திரட்டு, சென்னை, ராமையா பதிப்பகம்.

6. *Bowra. C.M., 1952, Heroic Poetry, London, Macmillan & co. Ltd.*
7. *Sidhanta. N.K., 1929 , The Heroic Age of India, London, Kegan paul, Trench, Trubner & Co. Ltd.*
8. *Vadim V. Trepavlov, 1995 ,'The Social Status of the Yakut Epic Hero', Asian Folklore Studies, Vol. 54, No. 1.*